மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.மஎண்.12/2022
உள்
அசல் வழக்கு எண்.08/2015
––––––––

ஜெயவேலன் பூசாரி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சொக்கலிங்கம் பூசாரி
2. இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சிவகங்கை.
3. செயல் அலுவலர்/துணை அலுவலர்
அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் கோவில்
இருக்கண்குடி.
4. தலைவர்,
பரம்பரை அறங்காவலர் குழு,
அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் கோவில்
இருக்கன்குடி.
5. எஸ்.ஏ.ராஜேந்திரன் பூசாரி
6. எஸ்.ராமர் பூசாரி
7. ஆர்.சௌந்திராஜன் பூசாரி
8. எஸ்.கதிரேசன் பூசாரி
9. எஸ்.எஸ்.ராமர் பூசாரி
10. ஹரிராம் பூசாரி
11. எஸ்.ஆர்.எம்.ராமமூர்த்தி பூசாரி
12. ஆர்.மகாராஜன் பூசாரி
13. எஸ்.மாரிமுத்து பூசாரி
14. எம்.நவரத்தினம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

15. கண்ணன்
16. பாரதி
17. அருண் ... 5 ம் பிரதிவாதி வாரிசுகள்

18. திருப்பதிராஜ்
19. முத்துராமலிங்கம் ... 13 ம் பிரதிவாதி வாரிசுகள் ... எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனு 25.11.2022 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 12.12.2023–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மைக்கேல்பாரதி அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.வாசவன் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 19ம் எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும்,4, 6 முதல் 12 மற்றும 14 முதல் 18 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 9 மற்றும் 151–ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுவை ஏற்று 13ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் ஏற்பட்டுள்ள அபேட்மெண்டை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 07.09.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–**</u>

வழக்கில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வழக்கு குறுக்குவிசாரணைக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கொரோன பெருந்தொற்றினால் முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டிருந்தது. அச்சமயத்தில் வாதியும் கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார். கடந்த 23.03.2022ம் தேதி 13ம் பிரதிவாதியான மாரிமுத்து பூசாரி மரணமடைந்துவிட்டார். மனுதாரர் கொரோனா பாதிக்கப்பட்டு முழுமையாக மீண்டுவர இயலாமல் தொடர்ந்து சிகிச்சை எடுத்து வந்த

காரணத்தினால் 13ம் பிரதிவாதி இறந்த விபரம் உடனடியாக மனுதாரருக்கு தெரியவில்லை. எனவே, 13ம் பிரதிவாதியின் இறப்பு குறித்து மனுதாரர் வழக்கறிஞரை உரிய காலத்தில் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க இயலவில்லை. 13ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு கைவிடப்பட்டுள்ளது. 13ம் பிரதிவாதியின் இறப்பிற்கு பின்னர் அதுதொடர்பாக அசல் வழக்கில் உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காமலிருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. இறந்துபோன 13ம் பிரதிவாதிக்கு 1.திருப்பதிராஜ் மற்றும் முத்துராமலிங்கம் என்னும் இரண்டு வாரிசுதாரர்கள் உள்ளனர். 13ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து அசல் வழக்கை தொடர்ந்து நடத்திட வழக்கில் ஏற்பட்டள்ள அபேட்மெண்டை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவின் மீது எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான நியாயமான ஆட்சேபணைகளும் இருக்கப்போவதில்லை. எனவே, இறந்துபோன 13ம் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள அபேட்மெண்டை ரத்து செய்து உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>1 ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**:-

மனுதாரர் மனு பொய்யும் புரட்டுமானது. மனுவில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கக்கூடியதில்லை. மனுதார் சேதுலிங்கம் பூசாரியின் மகன் இல்லை. இறந்துபோன மகன் இராமநாதனின் மகன் ஆவார். சேதுலிங்கம் பூசாரி இறப்பதற்கு முன்பாகவே மனுதாரரின் தகப்பனார் இராமநாதன் இறந்துபோனார். மனுதாரரின் தந்தை சேதுலிங்கம் பூசாரிக்கு முன்பாக இறந்துபோனதால் அவரது அடுத்த மகன் 1ம் எதிர்மனுதாரர் தான் அறங்காவலர் பதவிக்கு உரியவர் ஆவார். மனுதாரர் 15.09.2014 முதல் அறங்காவலராக இருந்து வருகிறார் என்று கூறியுள்ளது பொய்யாகும். 5ம் பிரதிவாதி இறந்ததாக கூறப்படும் 14.05.2021ம் தேதியில் எந்தவித நோய் தொற்றும் இருக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு அவரது தகப்பனார் சேதுலிங்கம் பூசாரி இறந்தபின் அடுத்த வாரிசு அடிப்படையில் கிடைக்கக்கூடிய அறங்காவலர் குழு உறுப்பினர் பதவி கிடைக்கவிடாமல் தடுக்கும் நோக்கத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு வேண்டாத சிலரது தூண்டுதலின் பேரில் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பிரதிவாதி இறந்த செய்தியும் அவரது வாரிசுகளும் தெரிந்து கொண்டே வேண்டுமென்று காலம் கடந்து மனு தாக்கல் செய்துள்ளார். அறங்காவலர் குழு உறுப்பினருக்கு இறந்தபோன அறங்காவலரின் மகன் தான் அடுத்த வாரிசு ஆகும். மனுதாரர் மகனின் மகன் ஆவார். எனவே, மனுதாரர் மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7) தீர்வு</u>:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கு ம் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் மனுவை ஏற்று 13ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் ஏற்பட்டுள்ள அபேட்மெண்டை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 07.09.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். ஒரு வழக்கைப் பொறுத்து தரப்பினர் ஒருவர் இறந்துவிட்டால் அவரது தரப்பில் அவரை சார்ந்தவரோ, அவரது வாரிசுகளோ வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமான மற்றும் நியாயமான ஒன்றாகும். அதற்காக இவ்வழக்கில் ஏற்பட்டுள்ள அபேட்மெண்டை ரத்து செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை

அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை மனுதாரர் ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்ட உதவி மையத்திற்கு ரூ.500/–ஐ செலவு தொகையாக வரும் 19.02.2024ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் இ.ம.எண்.11/2022ல் என்று உத்தரவிட்டுள்ள நிலையில், அந்த உத்தரவிற்கிணங்க இம்மனு அனுமதிக்கப்படும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா – 19.02.2024

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, மனுவை ஏற்று 13ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் ஏற்பட்டுள்ள அபேட்மெண்டை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 07.09.2022ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை இந்த மனுவினை மனுதாரர் ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்ட உதவி மையத்திற்கு ரூ.500/–ஐ செலவு தொகையாக வரும் 19.02.2024ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் இ.ம.எண்.11/2022ல் என்று உத்தரவிட்டுள்ள நிலையில், அந்த உத்தரவிற்கிணங்க இம்மனு அனுமதிக்கப்படும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா – 19.02.2024

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA
Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

உத்தேச எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.